# பண்டைத் தமிழகக் குடியிருப்புகள் உணர்த்தும் சமூகப் பிரிவுகள்

# The Social Sects Revealed in the Residential Areas of the Early Tamils

முனைவர் ச.கண்மணி கணேசன் / Dr.S.Kanmani Ganesan[1]

**Abstract**

This research article aims to highlight the social sects in early Tamilnadu as revealed in the people's residential areas. This research is essential to draw a clear picture of the social history of the early Tamils. A sociological approach is followed with the eight anthologies and the ten idylls as the primary sources. The marital problems among the early Tamils, differences in art performance, the commentators' commentaries and the researchers' opinions serve as secondary sources. The analysis revealed that the Velir lived in palaces amidst paddy fields called nadu. Kizhar, with their assistants of agriculture, lived in oor. The non-agriculturists lived in cheri adjacent to oor. Vanikar lived in niyamamoothoor. Cheeroor is a cluster of cheris away from oor

Date of submission: 2023-04-10
Date of acceptance: 2023-04-28
Date of Publication: 2023-07-30
Corresponding author's Name:
Dr.S.Kanmani Ganesan
Email: kanmanitamilskc@gmail.com

**Keywords:** *Nadu, oor, cheri, niyamamoothoor, cheeroor, kudimurai*

### முன்னுரை

பண்டைத் தமிழகத்துக் குடியிருப்புகள் மூலம் அறியலாகும் சமூகப் பிரிவுகளை விதந்து காட்டுவது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். இது பண்டைத் தமிழகத்தின் சமூக வரலாறைத் தெளிவுபடுத்த உதவும். சமூகவியல் கோணத்தில் அமையும் இவ்ஆய்வுக்கு எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் முதனிலைத் தரவுகள் ஆகின்றன. உரையாசிரியர் கருத்துகள், பிற ஆய்வாளர் கூற்றுகள் ஆகியன இரண்டாம் நிலைத் தரவுகள் ஆகின்றன.

### ஆய்வு முன்னோடிகள்

நச்சினார்க்கினியர் தன் தொல்காப்பிய உரையில் தமிழகத்தில் இருந்த இருவகை வேளாளர் பற்றிப் பேசுவதை எடுத்துக்காட்டி மு.இராகவையங்கார் தனது 'வேளிர் வரலாறு' என்ற நூலில் வேளிர் தமிழகத்தில் வந்தேறிய வேளாளர் என்று நிறுவி உள்ளார். உ.வே.சாமிநாதையரும் தன் புறநானூற்றுப் பதிப்பில் பண்டைத் தமிழகத்து உழுவித்தோர், உழுதோர் பற்றிக் கூறுகிறார். ஔவை சு.துரைசாமிப் பிள்ளை தன் புறநானூற்று உரையில் பண்டைத் தமிழகத்தில் நால்வருணப் பாகுபாடு இல்லை என்கிறார். மது.ச.விமலானந்தம் பண்டைத் தமிழ்ச்சமூகத்தில் தொழில் அடிப்படையில் பாகுபாடு இருந்ததே அன்றி சாதிப் பாகுபாடு இல்லை என்கிறார். நாராயண சாமி ஐயர் நற்றிணை உரையில் சீறூர்க்கு விளக்கம் தருகிறார். Who Are The Dravidians" என முனைவர் ஆன்ட்ரே தி.ஸ்ஜோபெர்க் எழுதிய ஆய்வுக் கட்டுரை 'திராவிடர் ஒன்றுக்கு மேற்பட்ட மக்களினத்தின் கூட்டுக் கலவை என முடிபு உரைக்கிறது.

[1]The author is a retired Principal& HOD in Tamil from Srikaliswari College, Sivakasi. India.

## குடியிருப்புகள்

நாடு, ஊர், நியமமூதூர், சீறூர், குடிமுறை போன்ற குடியிருப்புகள் தமிழகத்தில் இருந்தன.

தன் காதலனைத் தேடும் வெள்ளி வீதியார்;

"நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்

குடிமுறை குடிமுறை தேடின்

கெடுநரும் உளரோ நம் காதலோரே"

(குறுந்தொகை, 2007. ப.240, பா.130)

எனப் பண்டைத் தமிழகக் குடியிருப்புகளின் பெரும் பிரிவுகளை நாடு, ஊர், குடிமுறை என விதந்து சொல்கிறார். இவற்றுள் ஊர் எனும் பிரிவில் சீறூர், நியமமூதூர் இரண்டும் அடங்கும் ஆதலால்; தமிழ்ச் சமூகக் குடியிருப்புகள் மூன்று வகைப்பட்டன என வரையறுக்க இயல்கிறது.

## நாடு

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நானிலங்களிலும் நன்செய் வேளாண்மைக்கு உரிய நீர்வளம் மிகுந்த நாடுகள் இருந்தன. உழுவித்த வேளிரின் மாளிகை வயல்களுக்கு நடுவே இருந்தது. நாடுகள் சிலபல ஊர்களைத் தம்மகத்தே கொண்டு இருந்தன. கோட்டை கட்டி ஆண்ட வேந்தன், ஓரெயில் வேளிர் இருவர்க்கும் இடையே மணவுறவுச் சிக்கல் இருந்தது.

"நாடெனும் பேர் காடாக" (மது.156)

"காடாகி விளியும் நாடு" (புறம்.52)

"காடு என்றா நாடு என்றாங்கு" (புறம்.166)

"நாடா கொன்றோ காடா கொன்றோ" (புறம்.187)

"காடு முன்னினரே நாடு கொண்டோரும்" (புறம்.359)

ஆகிய பாடல் தொடர்களில் காட்டிற்கு உரிய எதிர்பதமாக நாடு அமைவதால் நாடு நன்செய் வளம் மிகுந்த நிலப்பரப்பு என்பது உறுதி ஆகிறது.

'கல் நாடு' (புறம்.60), 'குறும்பல் பொறைய நாடு' (ஐங்குறுநூறு, 2009. ப.648, பா.404) 'குன்று ஓங்கு வைப்பின் நாடு' (அகநானூறு நித்திலக் கோவை, 2008. ப.87, பா.338) 'நீடுவரை அடுக்கத்த நாடு' (பதிற்.55) ஆகிய தொடர்கள் குறிஞ்சி சார்ந்த நன்செயையும்; 'காடு தலைக்கொண்ட நாடு' (பதிற்றுப்பத்து, 2007. ப.172, பா.40) எனும் தொடர் முல்லை சார்ந்த நன்செயையும்; 'தண்கடல் படப்பை நாடு' (பதிற்.55-88) நெய்தல் சார்ந்த நன்செயையும் குறிக்கின்றன.

"பெண்ணையம் படப்பை நாடு" (புறம்.126)

மருதம் சார்ந்த நாடாகிறது.

'கல் நாடன்' (பத்துப்பாட்டு தொகுதி நீ, 2007. சிறு.ப.3, அ.87), 'மலை நாடன்' (சிறு.107), 'வரை நாடன்' (பெரு.103), 'குன்று கெழு நாடன்' (குறி.199), 'குறும்பொறை நாடன்' (ஐங்.183), 'சாரல் நாடன்' (அகம்.328) ஆகிய தொடர்கள் குறிஞ்சியில் நெல் வேளாண்மை செய்த வேளிரையும்; 'கான் கெழு நாடன்' (நற்.61), 'புறவு அணி நாடன்' (ஐங்.405), 'புன்புல நாடன்' (ஐங்.421), 'வன்புல நாடன்' (ஐங்.469) ஆகியன முல்லையில் நெல்வேளாண்மை செய்த தலைவரையும்; 'யாறுஞ் நாடனை' (குறு.271) எனும் தொடர் மருதத்தில் நெல்வேளாண்மை செய்தவரையும்; 'கடல் நாடன்' என்ற தொடர் (மது.524) நெய்தல் சார்ந்து நெல்வேளாண்மை செய்தோரையும் குறிக்கின்றன.

"முந்நூறூர்த்தே தண்பறம்பு நன்னாடு" (புறம்.110)

என்ற கபிலரின் கூற்றில் பாரிவேளின் நாடு முந்நூறு ஊர்களைக் கொண்டது என்ற செய்தி உள்ளது. 'வயலக நிறையஞ் நாடே' (புறம்.117) எனும் பாடல் பகுதி அவன் உழுவித்தமையை உறுதி செய்கின்றது. நச்சினார்க்கினியரின் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் (சூத்.30) தமிழகத்து வேளாளரை உழுதோர் உழுவித்தோர் என இருவகைப் படுத்துவதை எடுத்துக் கூறி; வேளிர் உழுவித்தோர் என்றும்; ஆய்வேள், பாரிவேள், நன்னன்வேள், வேள்ஆவி, வேள்எவ்வி ஆகியோர் வேளாளர் என்றும் உரைத்துள்ளார் மு.இராகவையங்கார் (வேளிர் வரலாறு, ப.127).

உ.வே.சாமிநாதையர் வேள் எவ்வியையும் ஆய்வேளையும் உழுவித்த வேளாளர் என்கிறார் (புறநானூறு, 1935. ப.49-68).

நெல்வேளாண்மை செய்ததால் சோழனின் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பரப்பு சோணாடு எனப்பட்டது (பட்டி.28; புறம்.382). 'காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கி' (பட்டி.28328) நீர் மேலாண்மை செய்தமை சோழனது நெல் வேளாண்மைக்கு ஏற்ற சான்று ஆகிறது.

பொய்கையார் சேரனை; 'நாடன் என்பேனா? ஊரன் என்பேனா? கடற்புறத்துத் தலைவனாகிய சேர்ப்பன் என்பேனா?' எனப் புகழ்கிறார் (புறம்.49). தொடர்ந்து நாடன், ஊரன், சேர்ப்பன் என்பதற்கு உரிய விளக்கங்கள் உள்ளன.

"புனவர் தட்டை புடைப்பின் அயலது

இறங்கு கதிர் அலமரு கழனியும் பிறங்குநீர்ச்

சேர்ப்பினும் புள்ளொருங்கு எழுமே" (மேலது).

புன்செயில் புள்ளோப்பத் தட்டையைப் புடைத்தால் அருகில் உள்ள நெற் கழனியில் இருந்தும்; கடற்கழியில் இருந்தும் பறவைகள் ஒருங்கு பறந்தோடும் என்கிறார். அவனது ஆட்சிக்குரிய நிலப்பரப்பில் புன்செயாகிய காடு இருந்ததால் ஊரன் எனும் தலைமைப் பட்டம் கோதைக்குப் பொருந்துகிறது; நெற் கழனி இருந்ததால் நாடன் எனும் தலைமைக்கு அவன் பொருந்துகிறான்; கடல் இருந்ததால் சேர்ப்பன் எனும் பெயரும் அவனுக்குப் பொருந்தும் என்று விளக்குகிறார்.

நெடுவேள் ஆதனது மாளிகை கடல் நடுவே மிதக்கும் கப்பலைப் போல் வயல்களுக்கு இடையில் காட்சி அளித்தது. மூவேந்தர் வந்து பெண் கேட்பினும்;

"...தன்தக– வணங்கார்க்கு ஈகுவன் அல்லன்" (புறம்.338)

எனப் பாடி இருப்பதால் வேந்தருக்கும் வேளிருக்கும் இடையிலான மணச்சிக்கலும் சமூகப் பிரிவும் புலப்படுகின்றன.

இருங்கோவேளிடம் பாரிமகளிரை மணந்து கொள்ளக் கபிலர் வேண்டிய போது; பாரியை 'நுமருள் ஒருவன்' (புறநானூறு பகுதிறீ, 2007. ப.6, பா.202) என்கிறார். இருங்கோவேளும் வேள்பாரியும் ஒரே இனத்தவர்; அதாவது வேளிர் என்பதைத் தான் 'நுமர்' என்னும் சொல்லால் குறிக்கிறார். இதனால் திருமண பந்தத்திற்கு ஒரே இனத்தைச் சேர்ந்தவர் முதல் தேர்வாக அமைந்தமை தெரிகிறது.

சங்ககாலத் தமிழகத்தில் தொழில் அடிப்படையில் பாகுபாடு இருந்ததே அன்றி சாதிப்பாகுபாடு இல்லை என்போர் உளர் (மது.ச.விமலானந்தம், தமிழ் இலக்கிய வரலாறு, 2004. ப.9). அள்ளூர் நன்முல்லையாரது மகட்பாற்காஞ்சிப் பாடல் அக்கூற்றைத் தவறெனக் காட்டுகிறது. குறுநில மன்னன் தன் மகளை யாருக்கு மணமுடித்துக் கொடுப்பான் என்பதைப் பேசும் போது; ஆவல் மீதூரப் பெண்ணைப் பற்றிக் கேட்ட வீரனிடம் அவளது தந்தை பற்றி அறிவுறுத்துபவராக; 'வேந்தனது யானையைச் செருவில் இருந்து வெளியேற்றும் துணிவும் திறனும் பொருந்திய இன்னொரு மன்னனுக்கே தன் மகளைக் கொடுப்பான்' என்கிறார் (புறம்.340). நெல் வேளாண்மையில் புலத்தைக் காவல் காக்க மிகுந்த சவால்களைச் சந்தித்த நிலையில்; சிக்கலைச் சமாளிக்க மகளைத் தம் இனத்துள் கொடுத்துச் சொந்தத்தைப் பெருக்கிப் பாதுகாப்பை மேம்படுத்த எண்ணிய போக்கு அன்றைய சமுதாயத்தில் இருந்தமை தெரிகிறது. திருமண பந்தத்தைத் தவிர்க்கும் பிரிவினை வேறுபட்ட இனத்தை அடையாளம் காட்டுகிறது.

புறநானூற்றில் உள்ள இருபது மகட்பாற்காஞ்சிப் பாடல்களுள் பதின்மூன்று பாடல்கள் நெல்வேளாண்மை செய்த வேளிர் வேந்தருக்கு மகண்மறுத்ததை உரைப்பன (புறம்.337, 338, 339, 340, 341, 342, 344, 345, 348, 351, 352, 353, 354). இது வேந்தரையும் வேளிரையும் வேறுபட்ட இனத்தவர் எனக் காட்டுகிறது.

**ஊர்**

சேற்றில் இறங்கி உழுதோர் நானிலத்து ஊர்களிலும் வாழ்ந்தனர். ஊர்த்தலைவர் ஆகிய கிழார்கள் தம் பாரம்பரியமான

புன்செய் வேளாண்மையுடன் தாம் சார்ந்த மன்னருக்காகவோ அன்றி வேந்தனுக்காகவோ நெல் வேளாண்மையும் செய்தனர். நாடுகளுள் சீறூர்களும் இருந்தன

பறம்பு மன்னனாகிய பாரிவேளின்;

"முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்" (புறம். 110);

என்பதால் பாணரும் பொருநரும் கூத்தரும் ஊர்களைப் பரிசாகப் பெற்றமை புலனாகிறது. அவர்கள் தாம் பெற்ற நிலத்தில் உழுது; தமது பாரம்பரியமான புன்செய் வேளாண்மையும் பாரிக்காக நெல் வேளாண்மையும் செய்தமை அவர் விளைத்த வரகு, தினை, எள், அவரை பற்றிப் பேசும் புறம்.120ல் புலனாகிறது.

நவிரமலை மன்னனுக்காக வேளாண்மை செய்த குறிஞ்சிக் கிழான் கொண்கானக் கிழான் ஆவான். 'கடல் போல் செல்வம் மிகுந்த மன்னன் அருகில் இருந்தும்; உயிர்க்கு ஆதாரம் ஆகிய குடிநீர் போன்ற அடிப்படைத் தேவைக்காக உன்னை உள்ளி வந்தேன்' என அவனை நாடிய புலவர் பாடுகிறார் (புறம்.154).

சிறுகுடி என்னும் ஊரைச் சேர்ந்த மருதநிலக் கிழான் பண்ணன் மழை பொய்த்துச் சோழனின் நெல்வேளாண்மை முடங்கிய போது; தான் செய்த புன்செய் வேளாண்மை மூலம் மக்கள் பசி தீர்த்ததால் "பசிப்பிணி மருத்துவன்" (புறம்.173) எனப் போற்றப் பெற்றான்.

காவிரிக்கரையில் பிடவூர் கிழான் மகன் பெருஞ் சாத்தனைக் கொண்டு நெடுங்கை வேண்மான் என்ற மன்னன் உழுவித்தான்.

"... செல்லா நல்லிசை

உறந்தைக் குணாது நெடுங்கை வேண்மான்

அருங்கடிப் பிடவூர் அறப்பெயர்ச் சாத்தன்" (புறம்.395)

என்ற பாடற்பகுதி மூலம் இதனை அறிகிறோம். அவனிடத்துப் 'பெருஞ்செய் நெல்லின் கொக்குகிர் நிமிரல்' மாந்தியமை பற்றிப் புலவர் மகிழ்ந்து உரைப்பது; அவன் மன்னனுக்காக நெல் வேளாண்மை செய்ததன் அடையாளம் ஆகிறது.

வேங்கடத்துக் கோமானுக்காக நெல் வேளாண்மை செய்த கரும்பனூரைச் சேர்ந்த முல்லைநிலக் கிழான் "ஒலிவெள் ளருவி வேங்கட நாடன்" (புறம்.381) எனத் தான் சார்ந்து இருந்த தலைவனை வாழ்த்துகிறான். மழை பொய்த்த காலத்தில் தன் பாரம்பரியமான புன்செய் வேளாண்மை மூலம் பாலிற் பெய்த வரகுச் சோறும் பாகிற் கொண்ட உழுந்தங்களியும் அளித்து இரவலர் பசி தீர்த்தான் (வல்லமை, "கரும்பனூர் கிழான் அளித்த விருந்து", 1.3.2021).

மல்லி எனும் ஊரைச் சேர்ந்த கிழான் காரிஆதி. சுற்றத்தோடு சேர்ந்து வசித்த தன் குறும்பில் நினைத்த நேரம் தமக்குள் கள்ளைப் பரிமாறிக் கொண்டு நெருங்கி வாழ்ந்தனர் (புறம்.177).

தன் மன்னனுக்காக நெய்தல் சார்ந்த நன்செயில் வேளாண்மை செய்தவன் பொறையாற்றுக் கிழான் (புறம்.391)

பிரிந்து சென்ற தலைவன்

"...அஞ் சீறூர் நாடு பல பிறக்கொழியச்" (அகம்.331)

சென்றதாகத் தலைவி உரைக்கிறாள். நாடுகளின் கூறுகளாகும் ஊர்களுள் சீறூர்களும் அடங்கும் என்பது இதனால் தெளிவாகிறது.

**சீறூர்**

ஊரை ஒட்டி அமையாத சேரிகள் சில சேர்ந்து சீறூர் ஆயின.

"ஊரலம் சேரி சீறூர்" (நற்.77)

எனத் தலைவன் தன் நெஞ்சோடு கூறும் போது; ஊரளவு பெரிதாக இன்றி ஒன்றோடு ஒன்று சேர்ந்த சேரிகள் சீறூர் என்று சொல்லத் தக்கனவாய் நிலவின என அறிகிறோம். அதனால் தான்;

"நெல்லும் உப்பும் நேரே ஊரீர்

கொள்ளீரோ எனச் சேரிதொறும்" (அகம்.390)

பண்டமாற்றுக்குக் குரல் கொடுக்கும் உமட்டி; சிற்றூரின் ஒவ்வொரு சேரியிலும் கூவியதாகத் தலைவன் பாங்கனிடம்

விவரிக்கிறான்.

நாராயணசாமி ஐயரும் 'பேரூர் அல்லாத சிலவாய சேரிகளை உடைய சீறூர்' என்கிறார் (நற்றிணை, 2007. ப.98).

## சேரி/குடிமுறை

குடிமுறை என்னும் மாற்றுப் பெயர் பெற்ற சேரிகள் ஊர்ப்புறத்தில் புல்வேய்ந்த குடிசைகளுடன்; வளம் மிகுந்து இருந்தன. சேரிக்குத் தலைவனும் இருந்தான்.

தலைவன் பிரிவதற்காகத் தோழியிடம் வருந்தும் தலைவி;

"கவ்வை தூற்றும் வெவ்வாய்ச் சேரி

அம்பல் மூதூர் அலர் நமக்கு ஒழிய" (அகம்.347)

என்கிறாள். 'சேரியோர் பழி கூற; அது அம்பலாகி; ஊராரால் அலராவதை நாம் மட்டுமே எதிர்கொள்ளும்படித் தவிக்கவிட்டு நீங்குகிறான்' என்பதால் சேரி ஊரை ஒட்டி இருந்தமை தெரிகிறது.

"...நல்லூர்...

தமர்தம் அறியாச் சேரியும் உடைத்தே" (நற்.331);

"ஊரும் சேரியும் ஓராங்கு அலர்எழ" (அகம்.383);

"ஊர் அலரெழச் சேரி கல்லென" (குறு.262);

"ஊரும் சேரியும் உடனியைந்து அலர் எழ"

(அகநானூறு. மணிமிடை பவளம், 2007. ப.235, பா. 220);

"உறைக்கிணற்றுப் புறச்சேரி" (பட்டி.76);

ஆகிய அடிகள் சேரி ஊர்ப் புறத்தே இருந்ததைக் காட்டுகின்றன.

"சேரிப் புல்வேய் குரம்பை" (அகம்.200)

புல்வேய்ந்த குடிசைகள் சேரியில் இருந்ததைத் தெரிவிக்கிறது.

"மல்லல் எம் சேரி" (நற்.249)

சேரியின் வளத்தை முதன்மைப் படுத்துகிறது.

"சேரிக்கிழவன் மகளேன் யான்" (கலித்தொகை, 2007. ப.370, பா.117)

எனத் தலைவி தன்னை அறிமுகப்படுத்தும் போது சேரிகளுக்கெனத் தலைவர் இருந்தமை தெரிகிறது.

பண்டைத் தமிழகத்து முதன்மை சான்ற குடிகளை;

"துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று

இந்நான்கல்லது குடியும் இல்லை" (புறம்.335).

என்கிறார் மாங்குடி கிழார். இப்பாடல் சொல்லும் முதுகுடிகளுள் பறையர் உளர். பறையருள் கிணைப் பொருநர் அடங்குவர். எனவே குடிமுறை என்பது சேரிக்குரிய இன்னொரு பெயர் ஆகிறது.

## ஊர் மக்களும் சேரி மக்களும்

வயலில் பணி செய்தோர் ஊரில் வாழச்; சேரியில் பிற தொழில் செய்பவர் வாழ்ந்தனர். மக்களின் இனம், தொழில் ஆகியவற்றின் அடிப்படையில் பரதவர் சேரி, பரத்தையர் சேரி, கூத்தர் சேரி, பாணர் சேரி, மறவர் சேரி, வேளாப் பார்ப்பார் சேரி எனச் சேரிகள் வகை பெற்றன. ஊரிலும் சேரியிலும் ஆடல்பாடல் நடைமுறைகள் வேறுபட்டன.

பொறையாற்றுக் கிழானைக் கண்டு பசியாற அவனது ஊருக்குச் சென்ற கல்லாடனாரை அவ்வூர் மக்கள்;

"...பசித்தெனஞ் முதுகுடி

நனந்தலை மூதூர் வினவலின்ஞ்

முன்னும் வந்தோன் மருங்கிலன் இன்னும்

அளியன் ஆகலின் பொருநன் இவன்" (புறம்.391)

என்றனர். முதுகுடியினராகிய ஊர்மக்கள் 'பண்டும் இங்கு வந்து பரிசில் பெற்றவன் எனினும்; மெலிந்த இரங்கற்குரிய தோற்றம் கொண்ட பொருநனாகிய அவன் பொருள் பெறத் தகுதி உடையவன்' என உழவர்

தலைவனாகிய பொறையாற்றுக் கிழானிடம் கூறுவது தமது இனத்தை விதந்து கூறிப் பரிந்து உரைப்பதாக உள்ளது.

### மறவர் சேரி

முதுகுடியினராகிய பொருநர் வீரராகவும் பணி ஆற்றினர். அவர் வாழ்ந்த சேரி 'மறம்கொள் சேரி' (மது.594) ஆயிற்று.

### பரதவர் சேரி

"புன்னை ஓங்கிய புலாலம் சேரி" (குறு.351);

'புன்னையம் சேரி' (குறு.320) எனப் பரதவர்சேரி பாடப் பெறுகிறது. சுறா வேட்டைக்குச் சென்ற பரதவர் கொல்லாமல் திரும்பார்.

"வேட்டம் வாயாது எமர் வாரலரே" (நற்.215)

எனும் பாடலடியில் பரதவர் சேரி மக்கள் அனைவரும் இனத்தை அடியொட்டி எமர் எனப்படுகின்றனர். பரதவர் அவரவர் திமிலில் மீன்வேட்டைக்குக் கிளையுடன் செல்வர் (நற்.331; அகம்.30); கிளையுடன் கூடிக் கோட்சுறா கிழித்த வலையைச் சீராக்குவர் (நற்.207). அத்துடன் பரதவன் கிளையோடு தேறல் மாந்தினான் (நற்.388). கிளை எனும் உறவு 'ஓரினத்தைச் சேர்ந்த நெருங்கிய உறவினர்' என்பது;

"இருங்கிளை இனனொக்கல்" (பத்துப்பாட்டு தொகுதி ற்ற்,

2008. பட்டினப்பாலை ப.19, அ.61) என்ற தொடரால் புரிகிறது. எனவே பரதவப் பெண் கூறும் 'எமர்' ஒரே இனத்தவர் என்பது உறுதி.

### வேளாப் பார்ப்பார் சேரி

பரதவர் சேரியை ஒட்டிய சங்குவளை செய்வோரின் குடியிருப்பு; 'இலங்கு வளை இருஞ்சேரி' (மது.136) எனப் பெயர் பெறுகிறது. வேளாப் பார்ப்பார் சங்கினை அறுத்து மங்கல வளை செய்யும் தொழிலில் ஈடுபட்டனர் (அகம்.24). வேள்வித் தொழிலை விட்டு வேறு தொழில் செய்த பார்ப்பனரே வேளாப்பார்ப்பார் ஆவர்.

### பாணர்சேரி

'மீன்சீவும் பாண்சேரி' (புறம்.348-மது.269) மீன்பிடித்த பாணரின் சேரி ஆகும்.

### கூத்தர்சேரி

வையை வெள்ளம் 'ஆடுவோர் சேரி அடைந்தென' என்பதால் (பரிபாடல், 2007. ப.146, பா.7) கூத்தர் சேரி இருந்தமை அறிகிறோம்.

### பரத்தையர் சேரி

'வாலிழை மகளிர் சேரி'யும் (நற்.380); 'ஒள்ளிழை மகளிர் சேரி'யும் (அகம்.146); பரத்தையர் சேரியை உணர்த்துகின்றன.

### நிகழ்த்து கலைகளில் வேறுபாடு

வேளாண்மை செய்வோர் ஊர்மன்றங்களில் எல்லாம் விழாக் காலங்களில் குரவை அயர்ந்தனர். சேரியில் துணங்கைக் கூத்து நிகழ்ந்தது. அறுவடையைக் கொண்டாட ஊரில் தண்ணுமை முழக்கினர்; சேரியில் கிணைப்பறை கொட்டினர். இக் கலாச்சார வேறுபாடு இனவேறுபாட்டை அடியொட்டி அமைகிறது.

"துணங்கை அம்தழூஉவின் மணம்கமழ் சேரி" (மது.329);

"மன்றுதொறும் நின்ற குரவை சேரிதொறும்

உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ" (மது. 615)

போன்ற செய்திகள் மேலாய்விற்கு உரியன. தழும்பனின் ஊணூர், நன்னனின் நவிர மலை, விராஅனின் இருப்பை போன்ற பிற பல இடங்களிலும் நெல் அறுவடை செய்யும் போது உழவர் தண்ணுமை முழக்க (அகம்.40, 204; புறம்.348; மலை.471- நற்.350); மள்ளர் கிணைப்பறை கொட்டினர்.

"கழனி உழவர் தண்ணுமை இசைப்பிற்...

வெல்போர் மள்ளர் தெண்கிணை கறங்க" (பதிற்.78)

என்பது காண்க.

## நியமமூதூர்

ஊர்களுள் நியமமூதூர் தனித்தன்மை வாய்ந்தது. அது வணிகரால் நிறுவிப் பராமரிக்கப்பட்ட நியமத்தை உடைய ஊராகும்.

நியமம் வணிகரோடு தொடர்புடையது என்பதைத் தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் கூறுகின்றன (தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, ஓவாமலை கல்வெட்டு, 2019, ஓவாமலை கல்வெட்டு – தொல்லியல் துறை; பவானி மா., மாங்குளம் தமிழ்க் கல்வெட்டுகள், (24.4.17). சமணர் பாண்டியர் உறவு மாங்குளம் கல்வெட்டு). நியமமூதூரைச் சேர்ந்தவன் வணிகன் என்பது தொல்லியலார் நிறுவிய செய்தி. பண்டைத் தமிழகத்தில் நியமங்களை ஒட்டி ஊர்கள் இருந்ததைப் பிற பாடல்களிலும் காண்கிறோம் (அகநானூறு களிற்றியானை நிரை, 2009. ப.215, பா.83-ப.232, பா.90).

நியமமூதூரில் இருந்து தேரில் வரும் செல்வமிகுந்த காதலனிடம் பிணங்கிய பரதவர் குலப்பெண்;

"இவளேஞ் மீன் எறி பரதவர் மகளே நீயே
நெடுங்கொடி நுடங்கும் நியமமூநூர்
கடுந்தேர் செல்வன் காதல்மகனே
நிணச்சுறா அறுத்த உணக்கல் வேண்டி
இனப்புள் ஒப்பும் எமக்கு நலன் எவனோ
புலவு நாறுதும் சென்றீமோ
பெருநீர் விளையுள் எம் சிறு நல் வாழ்க்கை
நும்மொடு புரைவதோ அன்றே
எம்மனோரில் செம்மலும் உளரே” (நற்.45)

என்கிறாள். ‘எம்மனோர்’ எமர் எனப் பொருள் படுகிறது. தம்மை நீங்கிச் செல்லச் சொல்லும் கடுமையோடு; வணிகர்க்குரிய மேனிலையைக் குறிப்பிட்டு; 'எம் இனத்திலும் செம்மாந்த ஆடவர் உளர்' என்கிறாள். திணைமாந்தராகிய பரதவர் குலப்பெண் புலால் நாறும் தம் தொழிலும் இனமும் பற்றி வணிகச் செல்வந்தனிடம் பேசுவதில் பொருளாதார ஏற்றத்தாழ்வும் சமூகப்பிரிவும் ஒருங்கு வெளிப்படுகின்றன. திருமணபந்தம் பற்றிய பேச்சில் 'தம் இனம்' என்று பொருள்படப் பிரித்துச் சொல்வது திணைமாந்தர் இடையே தொழில் அடிப்படைக்கு அப்பால் சமூகப் பிரிவினை தலைதூக்கி இருந்ததை உணர்த்துகிறது.

புறம்.183ல் ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன் மேல்வருணத்தாரையும் கீழ்வருணத்தாரையும் குறித்துப் பேசுகிறான். ஔவை சு.துரைசாமிப் பிள்ளை பதவுரையில் மேற்குலத்தான் கீழ்க்குலத்தான் என்று கூறிப் பின் விளக்கவுரையில் 'இது வடவாரியப் பகுப்பு முறை. தமிழகத்தில்ஞ் என்றும் இருந்ததில்லை' என்கிறார் (புறநானூறு பகுதி 1, 2007. ப.400). ஆயின் இதுகாறும் கண்டவற்றான் அப்பகுப்பைச் சேர்ந்த பார்ப்பார், வணிகர், வேளாளர் ஆகியோர் பண்டைத் தமிழகத்தில் தத்தமக்கு உரிய குடியிருப்பில் வாழ்ந்தனர் என அறிகிறோம்.

முனைவர் ஆன்ட்ரே F.ஸ்ஜோபெர்க் “Who Are The Dravidians” என்ற தன் கட்டுரையில் மரபணுவியல், தொல்லியல், மொழியியல், பண்பாட்டியல் ஆகியவற்றின் அடிப்படையில் ‘திராவிடர் ஒன்றுக்கு மேற்பட்ட மக்களினத்தின் கூட்டுக் கலவை’ என முடிபு உரைக்கிறார் (Symposium on Davidian Civilization, 1971, Andre F.Sjoberg, editor, p.2-31). பரதவப் பெண்ணின் மொழி அக்கூற்றை மெய்ப்பிக்கிறது.

## முடிவுரை

ஆரிய வருணப் பகுப்பு தமிழகத்திலும் காலூன்றி இருந்தது. நானிலங்களிலும் உழுவித்த வேளாளராகிய வேளிர் வயல்கட்கு இடையே மாளிகையில் வாழ்ந்தனர். வயலில் பணிசெய்த உழவர் கிழாரின் தலைமையில் ஊரில் வாழச்; சேரியில் பிற தொழில் செய்வோர், பரதவர், பாணர், கூத்தர், பொருநர், பரத்தையர், வேளாப் பார்ப்பார் ஆகியோர் வாழ்ந்தனர். இனம், தொழில் அடிப்படையில் அமைந்த சேரிகள் ஊர்ப்புறத்தில் புல் வேய்ந்த குடிசைகளுடன் வளம் மிகுந்தனவாய்த் தலைவருடன் இருந்தன. ஊரை ஒட்டி அமையாத சேரிகள் சில சேர்ந்து சீறூர் ஆயின. ஊர்மன்றங்களில்

விழாக் காலங்களில் குரவை அயர; சேரியில் துணங்கைக் கூத்து நிகழ்ந்தது. அறுவடையைக் கொண்டாட ஊரில் தண்ணுமை முழக்க; சேரியில் கிணைப்பறை முழக்கினர். வணிகர் நியம மூதூரில் வாழ்ந்தனர். வேந்தர், வேளிர், வணிகர், திணைமாந்தர்க்கு இடையில் மணஉறவில் சிக்கல்கள் இருந்தன. ஊரார்க்கும் சேரியோர்க்கும் இடையில் இருந்த கலாச்சார வேறுபாடு இனவேறுபாட்டைச் சுட்டுகிறது.

## References

*Ainkurunooru*, (2009). Chennai: *kazhaka veliyeedu*

*Akanaanooru kalirriyaanai nirai.* (2009). Chennai: *kazhaka veliyeedu*

*Akanaanooru manimidai pavalam*.(2007). Chennai: *kazhaka veliyeedu*

*Akanaanooru niththilakkovai*. (2008). Chennai: *kazhaka veliyeedu*

Andre'e F.Sjoberg, "Who are the Dravidians", p.1-31, Symposium on Dravidian Civilization,(1971). Asian Series of the Center for Asian Studies of The University of Texas, Austin.

*Bavani,maa., Maangulam Thamizhk kalvettukal, (24.4.17). Thamizhnaadu thakaval thirattu,* சமணர் பாண்டியர் உறவு மாங்குளம் கல்வெட்டு).

*Kaliththokai*, (2007). Chennai: kazhaka veliyeedu

*Kurunthokai*, (2007). Chennai: kazhaka veliyeedu

*Narrinai*. (2007). Chennai: kazhaka veliyeedu

*Paripaadal*, (2007). Chennai: kazhaka veliyeedu

*Paththuppaattu* part i. (2007). Chennai: kazhaka veliyeedu

*Paththuppaattu part ii.* (2008). Chennai: kazhaka veliyeedu

*Pathirruppaththu*, (2007). Chennai: kazhaka veliyeedu

*Puranaanooru, U.Ve.Saminathaiyer,* (1935). Law journal press, Chennai.

*Puranaanooru part i.& ii* (2007). Chennai: kazhaka veliyeedu

*Raakavaiyangar,R., velir varalaaru,* (1913). Madurai: *Centhamizh pirasuram, Thamizh changap peravai*.

*Thamizhnadu arasu tholliyal thurai, ovaamalai kalvettu,* (2019). ஓவாமலை கல்வெட்டு/ தொல்லியல் துறை

*Vallamai, "Karumbanoor Kizhan Aliththa Virunthu",* 1.3.2021, https://www.vallamai com/?p=101485.

*Vimalaanantham,Mathu.Sa., Thamizh Ilakkiya Varalaaru,* (2004). Chennai: *Abirami pathippagam*